
113190

கோயில் திருமாகாளத்
தல வரலாறு

Q23:38.21193
N54
113190

# கோயில் திருமாகாளத் தலவரலாறு

59



559.
3-54

உ

சிவமயம்

# கோயில் திருமாகாளத் தலவரலாறு

எழுதியவர்:

வித்துவான். திரு. ச. தண்டபாணி தேசிகர்

துணைத்தலைவர்,

பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

வெளியிட்டோர்:

திரு. M. P. சுந்தரேசன் அவர்கள்,

H R. & C. E. ஆலயநிர்வாகி,

ஸ்ரீ மாகாளநாதர் தேவஸ்தானம், கோயில் திருமாகாளம்.

தேவஸ்தான வெளியீடு

விலை ] 1954 [ 6-அணா

113190

ஸ்ரீ ராகவன் பிரஸ், மாயூரம்.

# முன்னுரை

சிவம் பெருக்கும் சிவாலயங்களைத் தன்னகத்தே கொண்டு தெய்வ மணத்தை என்றும் வீசிக்கொண்டிருப்பது நமது தென்னாடு. 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்றார் மணிவாசகப் பெருமான். அத்தகைய சிவாலயங்கள்தோறும் சென்று வழிபாடாற்றிவரும் முறையினைச் செய்து காட்டியவர்கள் நமது சமயாசாரியப் பெருந்தகையாளர்கள். அதன்படியே இன்றும் யாத்திரை செய்யும் அன்பர்கள் ஓரளவு அந்தத் தலச்சிறப்பினை அறிந்து வழிபட விரும்புவர். ஆகவே அவ்விருப்பத்தினை இந்நூல் பூர்த்தி செய்விக்கும் என்பது உறுதி.


அன்பர்கள் பெற்று, படித்து, வழிபட்டு இறைவன் திருவருளால் எல்லா நலனும் பெற்று இன்புறுவார்களாக.

இங்ஙனம்,

**M. P. சுந்தரேசன்,**
ஆலய நிர்வாகி.

# இதில் அடங்கியவை


| | | பக்கம் |
|---|---|---|
| அருள் தேக்கமே ஆலயம் | ... | 1 |
| சூழல் | ... | 2 |
| இடவசதி | ... | 3 |
| கோயிலும் வளமும் | ... | ,, |
| சுற்றுக் கோயில்கள் | ... | 14 |
| வரலாற்றுத் தொடர்புள்ள இடங்கள் | ... | 16 |
| தீர்த்தங்கள் | ... | 17 |
| சிற்பச் சிறப்புக்கள் | ... | ,, |
| சித்திரங்கள் | ... | 20 |
| சுதைச் சிற்பங்கள் | .... | 23 |
| புராண வரலாறு | ... | 24 |
| வரவு செலவு | ... | 30 |
| பூஜைகள் | ... | 31 |
| உற்சவங்கள் | ... | ,, |
| நிர்வாகம் | ... | 32 |
| கட்டளை | ... | ,, |
| தோத்திரங்களும் இலக்கியமும் | .... | ,, |
| திருப்பணி | .... | 33 |
| கல்வெட்டுக்கள் | .... | ,, |
| தேவாரப் பாடல்கள் | .... | 36 |

ஸ்ரீ தியாகராஜப் பெருமான், அம்பாள், டன் யாகத்திற்கு எழுந்தருளுதல்.

உ

சிவமயம்

# கோயில் திருமாகாளத் தலவரலாறு.

**அருள் தேக்கமே ஆலயம்:-**

இறைவனுக்குக் கருணையே திருவுருவம் 'ஆதலால்' எங்கெங்கு தல விசேடமும் தீர்த்தச்சிறப்பும் இருக்கின்றனவோ அங்கங்கு இறைவன் எழுந்தருளி இருக்கிறார். இறைவர் எழுந்தருளியிருக்கு மிடமெல்லாம் சிறப்புடையன ஆகின்றன. தண்ணீர் நிலப்பரப்பெங்கும் பரவியிருந்தாலும் குடிக்க விரும்புகிறவர்களுக்கு குளம், கேணி, ஊற்று முதலியவற்றின் வழியாக வெளிப்படுவது போல பசுவின் உடல் முழுவதும் பரவியிருக்கின்ற பால், மடியில் தேங்கிக் காம்பின்வழியாக வெளிப்படுவதுபோல எங்கும் நிறைந்த பொருளாகிய பரசிவம் திருக்கோயிலில் வெளிப்பட்டு அருள் வழங்குகிறது. எனவே இறைவன் அருள் தேக்கம் நிறைந்த இடங்கள் ஆலயங்கள்.

செந்தமிழ் நாடு திருக்கோயில்கள் செறிந்த நாடு. அதிலும் சோழ நாடோ ஆலயம் செறிந்த அழகான பகுதி. சோழநாட்டில் ஆலயம் இல்லாத சிறு கிராமத்தையும்

பார்ப்பது அரிது. இதனாலேயே சமயாச்சாரியப் பெருந்தகையார்கள் சோழநாட்டுத் திருப்பதிகளை வணங்கி வழிபட்டு, பாடற்பணி புரிந்து, விளக்கம் செய்தனர். அத்தகைய திருப்பதிகளுள் **கோயில் திருமாகாளமும்** ஒன்று.

எளிதில் எய்துதற்கு அரிய இன்பங்களை இசைவிக்கும் தலங்களே, எல்லாத் தலங்களிலும் சிறந்தது என்பதனை எல்லோரும் அறிவர். இத்தலத்தில் பராசக்தியாகிய காளி வழிபட்டு வீரஹத்தியை விலக்கிக்கொண்டாள் என்றால், மதங்கர் மனமாரப் போற்றிப் பராசக்தியைப் புத்திரியாகப் பெற்றார் என்றால், இதன் பெருமை எத்துணைத்து?

**சூழல்:-**

இத்தலம் மாயூரம் அறந்தாங்கி, கிளைப்பாதையில் பூந்தோட்டம் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே சுமார் ஒரு மைல் தூரத்தில் உள்ளது. நிழல் படர்ந்த சாலை. வழிநெடுக கிராமங்களும், வயல்களும், சோலைகளும் இருப்பதால் வழிகடக்கும் சிரமமே தோன்றாது. மாயூரமிருந்து பஸ் வசதியும் உண்டு. இதனைச் சூழ பல பாடல் பெற்ற சிவத்தலங்களும், மங்களா சாஸனம் பெற்ற விஷ்ணு ஸ்தலங்களும் பல உள்ளன. அரிசிலாற்றங்கரை ஓரமாக அமைந்துள்ள அழகான தலம். இது நன்னிலம் தாலுகாவைச் சார்ந்தது. கோயில் இருக்குமிடம் கோவில் திருமாகாளம் என்று வழங்குகிறது. காளி பூசித்துப் பேறுபெற்ற தல



மாதலின் மாகாளம் என வழங்குவதாயிற்று. இன்னும் நாககன்னிகையானவள் வழிப்ட்டுப் பேறு பெற்ற தலம் என்றாலும் பொருந்தும். காளம் - நாகம், மாகாளம் - பெருமை தங்கிய பாம்பு, நாக கன்னிகை வழிபட்ட வரலாற்றைக் குறிக்கும் சிற்பம் திருக்கோவிலின் உள் மண்டபத்திலேயே இருப்பதை இன்றும் காணலாம்.

**இடவசதி:-**

இங்குவரும் யாத்ரீகர்கள் தங்கி வழிபடுவதற்கேற்ற சத்திரங்களும், விடுதிகளும் பல உள்ளன. இவையன்றி விருந்திருக்க உண்ணாத வேளாளர்கள் பலரும் உணவு முதலியன அளித்துப்போற்றுவாராதலின் யாத்திரீகர்களின் வழிபாட்டிற்கு வசதிநிறைந்த தலம் இது என்னலாம். மேலும் தேவஸ்தான விடுதி உள்ளிட்ட பல சத்திரங்களும் இருக்கின்றன. யாத்திரீகர்கள் தேவஸ்தான நிர்வாக அதிகாரியின் அனுமதிபெற்று மூன்றுநாட்கள்வரை தங்கலாம். தேவையானவர்களின் உணவு வசதிக்காகக் கோயிலிலேயே தேசாந்திரிக் கட்டளையும் உண்டு.

**கோயிலும் வளமும்:-**

நான்கு புறமும் திருமதில் சூழ்ந்த கட்டுக்காவலோடு கூடிய ஆலயம். கிழக்குப் பார்த்த சந்நிதி. கீழக்கோபுரம் எழுநிலை மாடங்களோடு கூடிய உயர்ந்தகோபுரம். அதுவே

வழிபட வருவோர்க்கு வழிகாட்டியாக-பிறவிக்கடலில் அலைபட்டு வருவோர்க்கு அருள் துறைகாட்டும் கலங்கரைவிளக்கமாகக் காட்சியளிக்கிறது. கோயிலுக்கு இருசிறகிலும் கோயிற் பணியாளர் இல்லங்கள். அதற்கு எதிரில் அழகான சிறிய குளம். இதுவே சந்நிதி தீர்த்தம் என வழங்கப்பெறுகிறது. இதன் தோற்றத்தை இங்கே பாருங்கள்.




நாலலிங்க மாகிய கோபுரத்தை வழிபட்டு உள்ளே புகுந்தால் பெரிய முற்றவெளி. இதன் வலது புறத்தில் அதாவது வடகிழக்கு மூலையில் கல்யாண மண்டபமாகிய அலங்கார மண்டபம் இருக்கிறது. அதற்கு எதிரில் இறைவன் சந்நிதிக்கு நேரில் பலிபீடமும் நந்தி மண்டபமும் உள்ளன. அதன் அழகான காட்சி இது.





முற்றவெளியை யடுத்து துவாரவிநாயகர் எழுந்தருளியிருப்பதைப் பாருங்கள். இதோ தெரிவதுதான் இரண்டாங் கோபுரம்; ஐந்து நிலைகளையுடையது. இது அதிகார நந்தி எழுந்தருளியிருக்கும் இடமாதலின் அதிகாரநந்திகோபுரம் என வழங்கப்பெறும். வழிபாட்டிற்காக வருகின்றவர்கள் இந்த நந்தியெம்பெருமானுடைய ஆணைபெற்றுத்தான் உள்ளே செல்லவேண்டும். அதற்காக ஆனவரும் இவரை வழிபடுதல் வழக்கம்.



இரண்டாம் கோபுரத்தைத் தாண்டி உட்புகுந்ததும் மகா மண்டபம். அதில் முற்பகுதியிலேயே நாகநாதர், அம்மை, நாககன்னிகை முதலியவர்கள் எழுந்தருளியிருக்கிறார்கள். நாகநாதப்பெருமான் நல்ல ஒளியான சிவலிங்கத் திருமேனி. அவர் இடப்பக்கத்தில் இருந்த திருக்கோலத்தில் அம்மை எழுந்தருளியிருக்கிறார். இரண்டு திருக்கரங்கள். வலது கரத்தில் தாமரை மலர்ந்திருக்கிறது. இடது கரம் (ஊருஹஸ்தமாக) தொடையின்மேல் இருக்கிறது. அம்மை சுகாசனத்தில் வலதுகாலை மடக்கி-அருள் வழங்கும் இடது திருக்காலைக் கீழே தொங்கவிட்டுக்கொண்டு இருக்கிறார்.

பாதத்தின் அடியில் தாமரைமலர் இருப்பதைக் கவனியுங்கள். இந்தநிலை அன்பரகத் தாமரையில் அவன் எழுந்தருளியிருக்கும் காட்சியை நினைவூட்டுவது. நாகநாதப்



பெருமான் திருமுன்பு மிக அணுக்கத்திலே நந்தி எழுந்தருளியிருக்கிறார். இவர்களுக்குப்பின் வழிபாடு செய்த நாககன்னிகை யோகாஸனத்தில் காட்சி வழங்குகிறார். இவர் தோற்றத்திலேயே சாந்தமும் - தியான முதிர்ச்சியும் - சிவனடி மறவாச் சிறப்பும் தோன்றுதல் காண்க.



இவர்கள் அனைவரையும் வழிபட்டுக்கொண்டு சற்றுத் தலைநிமிர்ந்து வடக்குப் பக்கம் நோக்கினால் எழுந்தருளுந் திருமேனியாகக் காட்சி கொடுத்த நாயகரும், நடராசப் பெருமானும், ஏனைய உற்சவர்களும் காட்சி வழங்குவர். அவருள் காட்சிகொடுத்த நாயகரைத் தரிசியுங்கள். அவர்

வலது காலை ஊன்றிக்கொண்டு இடதுகாலைச் சற்று மடக்கிக் கொண்டு நிற்கிறார். வலது திருக்கரம் அன்பர்களுக்கு எதனையோ எடுத்து அளிப்பதைப்போல நடுவிரலையும் பெரு விரலையும் இணைத்துக்கொண்டு இருப்பதைப் பாருங்கள். இடதுகரத்தை அறிவுவடிவான இடபத்தின் சிரத்தில் ஊன்றிக்கொண்டிருக்கிறார். இடப்பக்கத்திலே அம்மையும் அவர் வழங்கும் அருளுக்குத் துணையிருப்பார்போல இறைவனையே நோக்கிக்கொண்டு எழுந்தருளியிருக்கிறார். இந்த மூர்த்திதான் மகோத்ஸவத்தில் சோமயாசிமாறரை நீசத் திருக்கோலத்துடன் சென்று ஆட்கொண்ட பிறகு காட்சி வழங்கவும் அதற்கு மறுநாள் விடியற்காலையில் மதங்கர், சோழச்சக்கரவர்த்தி முதலியவர்களுக்குக் காட்சி வழங்கவும் எழுந்தருளுவர்.





இவர்களைத் தரிசித்துக்கொண்டு சிறிது மேற்குநோக்கி உள்ளே சென்றால் அருளின் தேக்கமாகிய - ஆட்கொள்ளும் வள்ளலாகிய மகாகாளநாதர் சந்நிதியையடையலாம். சந்நிதியின் வலப்பக்கத்தில் துவார கணபதியும் விசுவேச லிங்கமும் எழுந்தருளியுள்ளனர்.



வாயிலின் இருபுறமும் துவாரபாலகர்கள் கம்பீரமான தோற்றத்துடன் காட்சியளிக்கின்ற அவர்களுடையனர். சுண்டு விரலின் தோற்றம் அதட்டற் குறிப்போடு 'ஒருவர் பின்னொருவராக அமைதியோடு மனநிறைந்து ஆண்டவனை வழிபடுங்கள்' என்று குறிப்பதுபோல இருப்பதைக் கவனியுங்கள். அடுத்து-கருக்கிருகமாகிய சிவனுறையும் இடத்தை நோக்கினால் அன்பர் அகத்தாமரையில் இருப்பதைப்போல கருக்கிருகத்தில் நடுநாயகமாகப் பெருமான் வீற்றிருப்பதைக் காணலாம். மகாகாளநாதஸ்வாமி அழகிய - சிறிய - ஒளியுள்ள திருமேனியுடன் காட்சி வழங்குவர். பக்கத்தில் அபின்னசக்தி எழுந்தருளியிருக்கிறார். இவர்களை வழிபட்டுக் கொண்டு வெளிப்போந்து வலம் வரத் தொடங்கினால் மகாகாளநாதப்பெருமானுக்குத் தெற்குப்பக்கத்தில் தியாகேசப்

பெருமான் சந்நிதி யுள்ளது. தம்பிரான் தோழராக - சோமாசிமாற நாயனாருடைய சைவயாகச் சிறப்பை உலகறியச் செய்த கருணை வள்ளல் இவரே! இவரையும் வழிபட்டுக்கொண்டு வலம் வரின் அறுபத்துமூவர், பரிவார கணபதி, தட்சிணாமூர்த்தி, பக்கத்தில் உதங்கர் மதங்கர் என்ற மகரிஷிகள், தனுசு சுப்பிரமணியர், மகாலட்சுமி, சண்டேசர் முதலியவர்களை வழிபடலாம். இவர்களுள், தனுசு சுப்பிரமணியர் திருமேனி யமைப்பு மிகச் சிறப்பானது. இவர் சிங்கார வேலவர் என வழங்கப்பெறுகிறார். நான்கு திருக்கரங்களோடு வில்லை யூன்றிக்கொண்டு, திருவடிக்கீழ் மயில் நிற்கக் காட்சி வழங்குகிறார்.






வெளிப்பிரகாரம் வந்தால் தெற்குப் பிரகாரத்தில் மேற்குக் கோடியில் **காளிகோயில்** விளங்கக்காணலாம். இங்குள்ள அம்மைதான் அம்பாசுரனைச் சங்காரம் செய்த வீரகத்தி தோஷம் நீங்க மகாகாளநாதப் பெருமானை வழிபட்டனர் என்பது தல புராண வரலாறு. இவருக்கு நான்கு திருக்கரங்கள் உள்ளன. இடது கையில் பான பாத்திரம் தாங்கியிருக்கின்றார். சிரத்தின் வலது பக்கத்திலும் உச்சியிலும் வென்ற இரண்டு அசுரர்களின் சிரங்களைச் சடையில் வைத்து முடித்திருக்கிறார். அன்பர்களுக்கு அச்சந்தவிர்க்கும் சூலம் அம்மையின் வலக்கையில் இருக்கிறது. மற்றொரு வலது கை, அஞ்சி வருகின்ற அடியார்களுக்கு அப்பயம் அளிக்கிறது.



இதோ நீங்கள் தரிசிப்பது அம்மையின் எழுந்தருளுந் திருமேனி. பஞ்ச லோகத்தாலாகியது. சிற்பத்திறமும் - தெய்வக்களையும் செறிந்தது. அன்பர்களின் பிரார்த்தனைகளை யீடேற்ற வல்லது. அம்மையின் திருமுகத்தில் காளிக் கேற்ற கடுமையைக் காண இயலாது. கடவுளை வழிபடு கின்ற காலத்து உண்டாகும் சாந்த நிலையையே தரிசிக்க லாம்.

இக்கோயிலுக்குப் பின்புறம் சற்றுக் கிழக்குதள்ளி அம்மை ஆலயம் இருக்கிறது. கிழக்குப்பார்த்த சந்நிதி. உயர்ந்த விமானம். சுற்றிலும் பிராகார மண்டபம். எல்லாம் புதிய திருப்பணி. ஆனால் திருப்பணி முற்றுப் பெறவில்லை. அதன் பொதுத் தோற்றத்தைக் கவனி யுங்கள்.





அம்மை நின்ற திருக்கோலம். தாமரை யாசனத்தில் இருதிருவடிகளையும் பதியவைத்து இருக்கின்றார். ஊரு ஹஸ்தம் (தொடையின் மேலொருகை) அன்பர்களுக்கு அபயம் அளிக்கும் திருக்கரம். அட்சமாலையையும், மலர்ந்த தாமரையையும் ஏந்தும் கரம் ஆகிய இவற்றுடன் - கருணை வழியும் விழித்துணையுடன் பெருமாட்டி நிற்கும்நிலை தியானிப்பவர்களுக்கு ஒரு விருந்தாகும்.



அம்மை திருநாமம் பயக்ஷயாம்பிகை என்பது. அடி யடைந்த அன்பர்களின் அச்சத்தை எல்லாம் போக்குவ தால் இந்தப்பெயர் பொருந்தியது. முற்காலத்தில் பட்ச

நாயகி எனவும் வழங்கிவந்தது. அதுவும் மிகப் பொருத்தமான திருநாமமே. யார் பேரன்புகொண்டவர்களோ அவர்கள் தாம் அச்சத்தையும் அகற்ற முடியும் ஆதலால் இரு பெயர்களும் ஒரு பொருளையே விளக்குவனவாக அமைத்திருத்தல் இன்புறுதற்குரியது.

## சுற்றுக் கோயில்கள்.

**1. அச்சந்தீர்த்த விநாயகர் :**

சோமாசிமாறனார் யாகஞ் செய்துகொண்டிருக்கும்போது இவரது சாதி சமயங் கடந்த பேரன்பை உலகினர்க்கு எடுத்துக்காட்ட இறைவன் நீசத்திருக்கோலங் கொண்டு எழுந்தருளினர். அப்போது சோமாசிமாறர் அஞ்சினர். விநாயகப்பெருமான் இவர் இறைவர்தான் என்று தன் வலதுகைச் சுட்டுவிரலைக் குறித்துக் காட்டி அச்சத்தைப் போக்கினர். இவர் மகாவரதமூர்த்தி. இந்த ஆலயம் அம்பலுக்கு அருகாமையில் யாகசாலைக்கு எதிரில் உள்ளது. ஆனால் ஆலயம் மிகச் சிதிலமாக இருக்கிறது.

**2. ஒளியாரப்பன்:**

இது இத்தலத்து ஐயனார் திருநாமம். கிராம தேவதை. இவர் கோயில் வீதியில் இருக்கிறது.

**3. பிடாரி:**

மகா உக்கிரமான கிராமதேவதை. இவர் கோயிலும் அதனை யடுத்துள்ளது.



**4. பிள்ளையார்:**

தோடிப்பிள்ளையார், தெற்கு வீதிப்பிள்ளையார் முதலிய விநாயகர் ஆலயங்கள் பல உள்ளன.

**5. மாரி அம்மன்:**

திருக்கோயிலுக்குக் கிழக்கே சற்றுதூரத்தில் சீதளதேவியாகிய மாரியம்மன் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கிறார்.

**6. வீற்றிருந்த பெருமாள்:**

இவர் கோயில் அம்பர் மாடக்கோயிலுக்கு மேற்குத் திசையில் உள்ளது. காளி அழகிய மோகினியாகிப் பின்வர, திருமால் கிழ வேதியர் வடிவங்கொண்டு அழைத்து வந்தனர். இக்கோயில் இடத்து வீற்றிருந்தனர். ஆதலால் இவர் வீற்றிருந்த பெருமாள் என வழங்கப்பெற்றார். வீற்றிருத்தல் - வேறு யாருக்கும் இல்லாத தனிச்சிறப்போடு இருத்தல்.

**இக்கோயிலின் தனிச்சிறப்பு** இங்கு ஒரு அழகிய மோகினி வடிவந்தாங்கிய அம்மை எழுந்தருளி யிருக்கிறார். இவரை அருச்சகர்கூடத் தீண்டிப் பூசை செய்வதில்லை. தூரத்தில் இருந்தே ஆடை மாலை முதலியவற்றைக் கோலால் சாத்தி வழிபாடு செய்வர். அர்ச்சகர்கள் அப்படி வழிபாடு செய்யும்போதும் மிகமிகத் தூய்மையுடன் இருக்க வேண்டும். ஆசாரக்குறைவுகள் இருக்குமாயின் ஆபத்து நிகழும் என்று இன்றும் அஞ்சுகிறார்கள். மக்களும் பயபக்தியுடன் வழிபாடு செய்கின்றனர்.

**7. அம்பர்:**

திருமாகாளம் கோயிலுக்குச் சுமார் 1½ கல் தொலைவில் இருக்கிறது. கோச்செங்கண்ணன் திருப்பணியாகிய மாடக்கோயில்களில் இதுவும் ஒன்று. யானையேறுப் பெருங்கோயில். காவிரித் தென்கரைத் தலங்களில் 54-வதாக வைத்து எண்ணப்பெறுவது. சோமாசிமாற நாயனார் அவதரித்த தலம். இறைவர் பிரமபுரிநாதர். இறைவி பூங்குழல்நாயகி. பிரமபுரிநாதருக்குப் பின்னே கருப்பக்கிருகத்துள் அம்மையப்பரைக் காணலாம். இங்கே புள்ள சட்டைநாதர் விசேஷமான மூர்த்தி.

**8. திருமீயச்சூர்:**

பூந்தோட்டம் ரயில்வே நிலையத்திலிருந்து சுமார் 2½ மைல் தூரத்தில் திருமீயச்சூர் இருக்கிறது. இதுவும் பாடல் பெற்ற தலம். இத்தலத்திற்குள்ளேயே திருமீயச்சூர் இளங்கோயில் என்ற தனித்த பாடல் பெற்ற திருத்தலமும் ஒன்றுண்டு. விமானம் கஜபிருஷ்ட விமானம்; சிற்பச் சிறப்பு யாரையும் வசீகரிப்பது.

## வரலாற்றுத் தொடர்புடைய கிராமங்கள்

அம்பாசுரன் வசித்த இடம் மகாகாள நத்தம் என வழங்கப்பெறுகின்றது. சோமாசிமாற நாயனார் யாகத்திற்காக நீசத் திருவுருவுடன் தியாகப்பெருமான் எழுந்தருளிய சாலையில் அம்மையார் தலையில் இருந்த மதுக்குடம் பொங்கிய இடம் பொங்குசாராயநல்லூர் எனவும், இறைவன் சுமந்து வந்த பறை தானே அடிபட்ட இடம் சகடமங்கலம்,



அடியுக்கமங்கலம் (இது இன்று அடியக்கமங்கலம் என வழங்கப்பெறுகிறது) இறந்த கன்றை எறிந்த இடம் கடாமங்கலம் எனவும் வழங்கி வருகிறது. இவை சோமாசிமாறனார் வரலாற்றிற்கு உரிய தக்க சான்றுகள்.

## தீர்த்தங்கள்.

கோயிலுக்கு எதிரில் இருப்பது மகாகாள தீர்த்தம் எனவும் அம்ச தீர்த்தம் எனவும் வழங்கப்பெறுவது. தீர்த்தவாரி கொண்டருளும் குளம் இதுவே. திருக்கோயிலுக்குப் பின்புறம் மேற்கிலும், வடக்கிலும் இரண்டு குளங்கள் உள்ளன. நதி அரிசில்நதி. தியாகப்பெருமான் செங்கழுநீர்த் தோடழகர் ஆனதால் கோயிலுக்குத் தென்கிழக்கு மூலையில் செங்கழுநீர்க் குட்டை என்று ஒன்று இருக்கிறது. அதில் எப்போதும் செங்கழுநீர் வளர்ந்துகொண்டிருந்ததாம். தியாகப்பெருமானுக்கு எடுத்து அணிவது வழக்கம்.

## சிற்பச் சிறப்புக்கள்

சிற்பியின் தியானபலம் சிற்பமாகி, தியானிக்கும் நமது சிந்தைக்குத் தெய்விக சக்தியை விளைவிக்கிறது. இத்தலத்தில் உள்ள சிற்பங்களில் காட்சிகொடுத்த நாயகரும், நீசத் திருக்கோலங் கொண்ட பெருமானும் கண்டவர் கண்ணை விட்டகலாக் கலைத்திறஞ் செறிந்தவர்கள். நீசத் திருக்கோலங் கொண்ட தியாகேசர் ஒரு காலை முன்வைத்து ஒருகாலைச் சிறிது பின்னிருத்தி, இருகைகளும் மத்தளம் முழக்குவதற்கு ஏற்ற விரல் அமைப்புக்களுடன் விளங்குகிறார். பக்கத்தில் அம்மை தம் குடும்பத்துடன் காட்சி

வழங்குகிறார். அதுவும் எப்படி? விநாயகக் குழந்தை தனது இடது கரத்தால் அம்மையின் வலது கரத்தைப் பற்றிக்கொண்டு நிற்கிறது. இளைய குழந்தை முருகேசனோ வலக்கரத்தைத் தூக்கிக்கொண்டு அம்மையின் இடது கரத்தைப் பற்ற விரும்பி நிற்கிறார். இப்படி இரண்டு குழந்தைகளையும் இரண்டு கைகளிற் பற்றிக்கொண்டு நிற்கும் காட்சி காண்பவர் மனதிற்குப் பெருவிருந்து.

காட்சி கொடுத்த நாயகரைப்பற்றி முன்னரே தெரிவிக்கப்பெற்றது. இவர்களையன்றி வாசுகி ஐந்து தலைகளுடன் யோகாசனத்தில் விளங்குவதும், நந்தியெம்பெருமான் சந்நிதியைவிட்டு விலகியிருப்பதும், துவாரபாலகருடைய முகபாவமும், நடராஜர், சுந்தரமூர்த்தி, பரவையார், சோமாசிமாறர், சுசீலையம்மையார், நர்த்தனகணபதி திருவுருவங்களும் மிகச்சிறப்பானவை.





கருப்பக்கிருகத்துத் தென்பக்கம் சுவரில் தட்சிணாமூர்த்திக்குப்பக்கத்தில் உதங்கர் மதங்கர் மகாகாளநாதரைப் பூசிக்கும் சிற்பம் உடைந்து இருக்கிறது.



காளி இறைவனைப் பூசிக்கும் திருவுருவம் இது.

## சித்திரங்கள்

இந்தத் தலத்தில் நடைபெற்றது சோமாசிமாற நாயனருடைய வரலாறு ஆகலின் அதில் சிறந்த பகுதிகளாகிய பரவைகேள்வராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் தூதுளங்கீரை அளித்தலும்,



(தூதுளங்கீரை அளித்தல்)

சுந்தரர்வாயிலாகத் திருவாரூர் [illegible] தியாகேசப் பெருமானை யாகத்திற்கு எழுந்தருளும் வண்ணம் வேண்டிக் கொள்ளுதலும்,



(யாகத்திற்கு எழுந்தருள வேண்டுதல்)



நீசத்திருக்கோலத்துடன் இறைவன் யாகசாலைக்கு எழுந்தருளுதலும், சோமாசிமாறர் எதிர்கொண்டு வணங்குதலும், இறைவன் காட்சி கொடுத்த காதராக இ[illegible]கனத்தில் எழுந்தருளிச் சோமாசிமாறருக்கும் அவர் மனைவியார்க்கும், சுற்றத்தாருக்கும், சூழ நின்ற அன்பர்களுக்கும் உதங்கர் யதங்கர், சோழ மகாராஜா முதலியோர்க்கும் அருள் வழங்குதலும்

(இடபவாகனத்தில் காட்சி கொடுத்தல்)



ஆகிய சித்திரங்கள் திருக்கோயிலின் வடக்குப் பிரகாரத்தைச் சுற்றிலே மண்டபத்தில் எழுதப்பெற்றுள்ளன.

சித்திரங்கள் கண் வழியாகப் புகுந்து கருத்தை வளர்ப் பனவாக அமைந்துள்ளன. இவையன்றித் தல விசேடத்தை விளக்குவதாகிய காளி பூசை செய்யும் சித்திரமும் மிக அழகிய முறையில் அமைந்துள்ளது கண்ணுக்குப் பெரு விருந்தாகும்.





மதங்க முனிவர் நெடுநாள் தவஞ்செய்து உமாதேவி யாரைத் தன் மகளாகப் பெற்று, மாதங்கி என்று பெயர் சூட்டி வளர்த்து, பெருமானுக்குத் திருமணஞ் செய்து கொடுக்கின்ற காட்சியை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறது இந்தச் சித்திரம்.

**சுதைச் சிற்பங்கள்:**

கருப்பக் கிருகத்து விமான முழுதும் கருங்கல்லான் அமைந்துள்ளது தனிச்சிறப்பு. அதில் நான்கு பக்கங் களிலும் ஆகம விதிப்படி அமைய வேண்டிய தட்சிணா

மூர்த்தி, திருமால், லிங்கோத்பவர், பிரமன், பார்வதி பரமேஸ்வரர் முதலிய சுண்ணாம்பாலாகிய சிற்பங்கள் அங்கங்கு அமைந்துள்ளன.

## புராண வரலாறு

### பிரமன் அன்னவடிவம் நீங்கி யருள்பெற்றது

பிரமனும் திருமாலும் நான் பெரியன் நான் பெரியன் எனத் தருக்கித் தமக்குள் போர் புரிந்தனர். இவர்கள் செய்த சண்டை பூவுலகிற்குப் பெருந் தீங்காய் முடிந்தது. இதைத் திருவுளங்கொண்ட பெருமான் உலகத்தைக் காப்பாற்றுவதற்காக - பெரியவர்க்குப் பெரியவனாவான் ஒருவன் உளன் 'என்பதை இவர்களுக்கு விளக்குவதற்காக இருவரிடையிலும் ஒரு தீமலையாய்த் திகழ்ந்தார். இதனைக்கண்ட இருவரும் தம்முள் செருக்கடங்கி ஒரு சபதம் செய்வாராயினர். நம்முள் ஒருவர் இம்மலையின் அடியைக் காணவேண்டும் ஒருவர் முடியைக் காணவேண்டும். யார் முன்னர் கண்டு திரும்புகின்றார்களோ அவரே பெரியர் என்று சபதம் செய்துகொண்டனர். பிரமன் அன்னமாயினன்; முடிதேடப் பறந்தான். திருமால் பன்றியாயினன்; அடிதேடத் தோண்டினான். முடிதேடச் சென்ற பிரமன் முடியாமையால் இறைவன் திருமுடியில் இருந்து நழுவிய தாழம்பூவைப் பொய்க்குச் சாட்சியாக வைத்துக்கொண்டு இறைவன் முடியைக் கண்டதாக மொழிந்தான். அதனால் இவன் எடுத்த அன்னவடிவம் இவனை நீங்கவில்லை. வருந்தினான். இறைவன் ஆணையின் வண்ணம் இந்தத் [illegible]கிற்கு வந்து தம்பெயரால் அன்னதீர்த்தம் ஏற்படுத்தி அதில் முப்போ[illegible] வழிபட்டுப் பிரமனாகிய தெய்வ வடிவம் எய்தினான். அதனால் இத்தலத்திற்குப் பிரமபுரம் என்றும் ஒரு பெயர் உண்டு.



### இந்திரன் வெற்றிகண்ட வரலாறு.

புலத்தியர் மரபில் வந்த சம்மாரசீலன் என்பவன் பிரமனை நோக்கிக் கடுந்தவம் புரிந்து வெற்றி வீரனாக விளங்கினான் அவன் இந்திரனையும் வென்று அமராவதி நகரையும் கைப்பற்றினான். நகரைப் பறிகொடுத்த இந்திரன் இத்தலத்தை அடைக்கலத் தானமாக அடைந்து தன்பெயரால் தீர்த்தம் அமைத்து வழிபட்டான். இறைவன் பைரவத் திருக்கோலந் தாங்கி அந்தச் சம்மாரசீலனைக் கொன்று அவனுடைய அங்கத்தைத் தண்டமாகத் தாங்கிச் சட்டைநாதராக எழுந்தருளினார். இவர் ஆலயம் அம்பரில் தெற்குப் பிராகாரத்தில் இருக்கிறது என்று முன்னரே குறிப்பிட்டோம். [illegible] அமராவதியைப் பெற்று மகிழ்ந்தான். [illegible] இந்திரபுரி என்றும் ஒரு பெயருண்டு.

### மன்மதன் வன்மை பெற்ற வரலாறு

தேவர்கள் ஏவலால் மன்மதன் விசுவாமித்திர தவ வலியைக் குலைக்கத் தேவகன்னிகைகளைத் துணையாக அழைத்துக் கொண்டுபோய் விசுவாமித்திரர் மேல் [illegible] பாணங்களைத் தொடுத்து வருத்தினான். விசுவாமித்திரர் [illegible]லைக் கண்டு சினந்து உன் மலர்ப்பாணங்கள் [illegible]யற்று ஒழிக எனச் சாபம் தந்தனன். மன்மதன் பல்லிழந்த நாகம் போல வலிமை கெட்டனன். பின்னர் இத்தலத்தை எய்தி மாகாளநாதரை வழிபட்டுச் சாபநீங்கப்பெற்றான். இதனால் இத்தலத்திற்கு வந்த பெயர் மாரபுரி.

### விமலன் மக்கட்பேறடைந்தது

காசிப் பிராமணனாகிய விமலன் என்பவன் தீர்த்த யாத்திரையாகத் தென்னாடு வந்தான். இந்தத் தலத்திற்கு அவன்

113190

வந்த மாதம் தனுர்மாதம். அந்த மாதம் முழுதும் உண்ணு விரதம் பூண்டு விதிப்படி நீராடி வழிபட்டு வந்தான். பெருமான் அருளால் புத்திரனைப் பெற்று புதல்வனுக்கு மகாதேவன் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தான். இந்த அம்ச தீர்த்தத்தில் தனுர்மாத முடிவாகிய தைமீ முதல்நாள் மகர சங்கராந்தி புண்யகாலத்துக் கங்கை வெளிப்படுவதாக ஐதீகம். இந்த நாளில் நீராடி வழிபடுவோர் இஷ்டகாம்யங்களை எய்துவர்.

## நந்தன் பிரம்மஹத்தி நீங்கியது

காம்போஜ நாட்டை யாண்ட நந்தன் என்னும் மன்னன் ஒருநாள் வேட்டையாடக் காட்டுக்குப்போனான். அங்கு பிங்காஷ்ட முனிவர் புலித்தோலைப் போர்த்திக்கொண்டு கடுந்தவம் செய்தார். அவரைத் தூரத்தேகண்ட நந்தமன்னன் இது புலியென்று எண்ணி அம்பெய்தான். முனிவர் இறந்தார் அரசனை பிரமகத்தி தோஷம் பற்றியது. அதனால் வருந்திய அரசன் உய்விடந்தேடி ஊரெல்லாம் சுற்றிவந்தான். இத்தல எல்லையை அடைந்ததும் பிரமகத்தி நீங்கியது. அரசன் மகிழ்ந்து இங்கேயே தலவாசம் செய்துவந்தான். அவன் கட்டிய கோட்டை யிருந்த இடம் இன்று கோட்டைமேடு என்ற பெயருடன் வழங்கிவருகிறது. இதற்குத் தெற்குப் பக்கத்தில் குதிரைப்பள்ளம் என்ற இடம் உண்டு. இது அரசன் குதிரை லாயமாக இருந்ததாம். இங்கு ஒரு விநாயகர் எழுந்தருளியிருக்கிறார். இவருக்கு கோட்டை வாசல் விநாயகர் என்று பெயர். இவ்வரசன் பெயரால் இத்தலம் நந்தராசபுரம் என வழங்கியது.

## சோமாசிமாறர் வரலாறு:

அம்பர் என்னும் ஊரிலே அந்தணர் குலத்திலே அவதரித்தவர் சோமாசிமாறர். அவர் மனைவியார் சுசீலாதேவியார்.



இவர் அந்தண குல நலத்திற்கு ஏற்ப நித்தியாக்னி வழிபாடு முதலியன இயற்றி வந்தார். இவருக்குச் சோமயாகம் செய்ய வேண்டும் என்ற விருப்பம் திருவருள் வசமாக உண்டாயிற்று. சோமயாகம் என்பது சோமலதையைப் பிழிந்து செய்யும் யாகம். அந்த யாகத்தில் இறைவனே, அக்னி முகமாக அன்றி நேரே வந்து அவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று எண்ணினார். இந்த எண்ணத்தை இறைவனுக்குத் தெரிவித்து முடித்து வைக்கும் வன்மையுடையவர் யார் என்று ஆராய்ந்து, நம்பியாரூராகிய சுந்தரர்பெருமானைத் துணைகொள்ள விரும்பினார். சுந்தரர் திருவுள்ளத்தைப் பெற அவருக்கு விருப்பமான தூதுளங்கீரையைத் தினந்தோறும் பறித்துக்கொண்டு போய்ப் பரவையார் திருமாளிகையில் அளித்துவந்தார். திருவருள் துணைசெய்ய இத்தொண்டினைத் தவறாது செய்வார் யார் என்று பரவையார் வாயிலாக அறிந்த சுந்தரர் பெருமான், நிறை செல்வத் தியாகப் பெருமான் திருமுன் சென்று விண்ணப்பித்தனர். அன்பர் மனமறிந்து உதவும் தியாகப்பெருமான் சுந்தரரிடம் அவன் அறிந்து அளிக்க வல்லனாயின் அவன் விரும்பிய வண்ணம் நேரேவந்து அவிபெறுவோம் என்று ஆணை தந்தனர்.

சோமாசிமாறனார் அம்பருக்கும் கோயில் திருமாகாளத்திற்கும் இடையில் உள்ள சிறந்த இடத்தில் சோமயாகத்தைத் தொடங்கினர். வைகாசி மாதத்து ஆயில்ய நன்னாள் வந்தது. பூர்ணாகுதி செய்து அவி வழங்கவேண்டிய சமயம் சொல்மாறாப் பெருமானாகிய தியாகேசன் நீசத் திருக்கோலத்துடன் மழு வேந்திய கையில் மறித்தகன்றைத் தாங்கி அபய வரத கரங்களிரண்டும் உடல் என்னும் பறையை முழக்க வெள்ளக் கருணை விண்ணவர் பெருமான் பள்ளப்பெருமானாக யாகசாலைக்கு எழுந்தருளினர். அவரைத் தொடர்ந்து நான்கு வேதங்களும் நாலு நாய்களாக வந்தன. நந்தனும் கணபதியும் பள்ளச் சிறுவராக அம்மை கரத்தைப் பற்றி வந்தனர். இதனைக்கண்ட சோமாசி

மாறர் 'இதுவோ பூர்ணாகுதி வேளை. இப்போ சொல் தவறாத தியாகப் பெருமான் எழுந்தருள வேண்டிய நேரம். நீசன் வருகின்றான். இந்தக்கோலத்து இறைவன் வருகின்றாரோ என்னவோ. நாம் என்ன கண்டோம்' என்று ஐயம் உற்று நின்றனர். யாகசாலையிலிருந்த அந்தணர்கள் யாகம பழுதாயிற்று என்று ஓட்டம் பிடித்தனர். சோமாசிமாறனார் அஞ்சி விக்கினந்தவிர்க்கும் விநாயகனைப்பணிந்து நின்றனர். அச்சந்தவிர்த்த ஐங்கரத் தானைமுகக்கடவுள் தம் சுட்டுவிரலால் குறிப்பாக 'இவரே தியாகன இவரே அவி வாங்க வந்திருக்கிறார்' என்று அறிவித்தனர். சோமசிமாறர் மனந்தெளிந்து வணங்கி வரவேற்று அவியை அளித்தனர்.

அவி பெற்ற தியாகப்பெருமான் காட்சி கொடுத்த நாயகராக இடபாரூடராக எழுந்தருளினர். நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் மழை பெய்வதுபோல சோமாசிமாறனார் செய்த தூய தவத்தால் எல்லோரும் பெருமானைக் கண்டனர். ஞானக்கண்ணாற் காணவேண்டிய நாயகனை ஊனக் கண்ணாலும் கண்டு உடம்பெடுத்த பயனைப்பெற்றனர் தீண்டாதவன் வந்துவிட்டான் என்று அஞ்சியோடிய அந்தணர்களும் வந்து வணங்கினர். 'இறைவன் நீங்கள் என்ன ஓதியும் உண்மை உணரும் ஆற்றல் இன்மையால் 'மத்தியான காலத்து மட்டும் நீங்கள் சண்டாளர்கள் ஆகுக' என்று பணித்தருளினர். இறைவனைத் தரிசித்த அவர்களும் இன்பமுற்றனர். சோமாசிமாறனார் சுசீலையாருடன் ஈறிலாப் பெரும்பதம் எய்தினர்.

## காளி பூசித்தது:

மதலோலை என்னுமாது ஆகாய வழியாகத் திருக்கயிலை செல்லும் துர்வாசரைக் கண்டு காதலித்தாள். புத்திரப் பேறு அளித்திட வேண்டும் என்று வேண்டினாள். இரக்கங்கொண்ட



முனிவர் உன் விருப்பின்படி யாகுக என்றனர். உடனே கருவுற்ற அம்மங்கை ஆகாய வீதியிலேயே அம்பன் அம்பரன் ஆகிய இருமக்களை ஈன்றனள். தாயின் உபதேசப்படி அவ்விருவரும் இத்தலத்திற்கு எழுந்தருளி இறைவனைப் பூசித்து இறவா வரம் பெற்றனர். மிக்க வலிமையுடன் வாழ்ந்து வந்தனர். வரபலம்செருக்கை மிகுத்தது. அதனால்தேவர்களைத்துன்புறுத்தினர். முனிவர்களை வாட்டினர். நல்லோர்க்கு இடுக்கண் செய்தனர். இது கண்ட தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டுக்கொண்டனர். முன் மாமாயினும் வைத்தவுடனே வெட்டக் கூடாது அவ்விருவரும் எம்மால் அருள் பெற்றவர்கள்' என்ற குறிப்புடன் அம்மையை நோக்கினார். திருவுள்ளக் குறிப்பறிந்த அம்மையார் சீற்றங்கொண்டு காளியாயினள். திருக்கயிலை விட்டுத் தென் திசை நோக்கி விரைந்தனர். சிவபெருமான் ஆணையின் வண்ணம் திருமால் கிழவேதிய வடிவங்கொண்டு காளியாகிய அம்மையைப் பின் தொடர்ந்தனர். அம்பன் அம்பரன் வாழும் இத்தலத்தையடைந்தனர். இறைவனருள் பெற்ற இவர்களை அருள் வடிவாகிய நாம் அழிப்பது அடாது; அவர்களே அடித்துக்கொண்டு அழியச் செய்வதே மேல் எனத் திருவுளங் கொண்டனள். மோகினி வடிவெடுத்து உலாவினள். இதனைக்கண்ட அசுரர் இருவரும் கிழ வேதியரை யணுகி இக்கன்னியை எனக்குத் தருக எனக்குத்தருக என்று இரந்தனர். கிழவேதியர் ஒரு கன்னியை இருவருக்குத் தருவது எப்படி? உங்களுக்குள் ஒரு முடிவுக்கு வந்து கேளுங்கள் தருகிறோம் என்றனர். இருவரும் நானே பெறுவேன் நானே பெறுவேன் என்று ஆடையை இறுக உடுத்திக் கொண்டு தோள்தட்டி மார்படித்து மல்யுத்தத்திற்கு இறங்கினர். அம்பாசுரன் இறந்தான். அம்பன் கிழவர் பக்கம் அணுகிக் கன்னியின் மேலிருந்த காதல் மிகுதியால் கட்டித் தழுவ ஓடினன். அம்மை காளியாய் அவனைப் பற்றிக் கிழித்துக் கொன்றனள். புலஸ்திய வழியில் வந்தவனாதலின் அவனைக் கொன்றதால் விளைந்த பிரமகத்தி தோஷம் அம்மையையும் அணுகிற்று

அம்மை இத்தலத்திற்கு வந்து அரிசிலாற்றில் நீராடி மகாகாள நாதரை வழிபட்டனள். பிரமகத்தி நீங்கியது. இந்த நிகழ்ச்சியைத் தெரிவித்து அனைவரையும் ஆட்கொள்ளும் முறையால் காளியம்மையின் திருமுடியில் அம்பன் அம்பரன் இருவர் சிரங்களும் விளங்குவதைக் காணலாம்.



## வரவு செலவு:

இத்திருக் கோயிலுக்கு ஆண்டு ஒன்றுக்கு உத்தேச வருமானம் ரூ. 20,000 உத்தேசமாக நிர்வாகச் செலவு



வகையில் மூவாயிரமும், கட்டிட ரிபேர் மராமத்துவகையில் ஐயாயிரமும் நித்ய பூஜை, ஏறுபடிச் செலவு வகைகளுக்குப் பத்தாயிரமும் செலவாகிறது.

## பூஜைகள்:

இத் திருக்கோயிலுக்கு ஐந்து கால பூஜை நடைபெறுகிறது. ஒவ்வொரு நாளும் காலை $8\frac{1}{2}$ மணிக்குக் காலசந்தியும், 12 மணிக்கு உச்சிக் காலமும், மாலை $5\frac{1}{4}$ மணிக்குச் சாயரட்சையும், இரவு $7\frac{1}{2}$ மணிக்கு இரண்டாம் காலமும், 9 மணிக்கு அர்த்த யாமமும் நடைபெறுகிறது.

## உற்சவங்கள்:

புராண வரலாற்றின்வண்ணம் இத்தலத்தில் வைசாக உத்ஸவம் பத்து நாட்களும் பிரமோற்சவமாகக் கொண்டாடப் பெற்று வந்திருக்கிறது. இப்போது பக்தோற்சவமாகிய சோமாசிமாற நாயனர் உற்சவம் மட்டும் நான்கு நாள் கொண்டாடப் பெறுகின்றது. இவையன்றி, குருவாரம், சுக்கிரவாரம், பிரதோஷம், கார்த்திகை, பதினெட்டாம் பெருக்கு, விநாயக சதுர்த்தி, ஆடி வெள்ளி, நவராத்திரி, விஜயதசமி, ஐப்பசி கந்தசஷ்டி சூரசம்மாரம், கார்த்திகை மாசத் திருக்கார்த்திகை விழா, மார்கழித் திருவாதிரை நடராசப்பெருமான்விழா, தைமாதம் அம்பாள் கனு உற்சவம், மாசிமீ மகாசிவாராத்திரி உற்சவம், நடராசாபிஷேகங்கள் ஆறு, மாசப்பிறப்பு அபிஷேகங்கள், கிரகண புண்யகால அபிஷேகங்கள் முதலிய எல்லா வார பக்ஷ அயன உத்ஸவங்களும் திட்டப்படி நடைபெற்று வருகின்றன.

## நிர்வாகம்:

இத் திருக்கோயிலும் சென்னை ராஜ்ய அறநிலையப் பாதுகாப்பு நிர்வாகத்திற்குட்பட்டது. அவர்களால் நிய மிக்கப்பெற்ற

திரு. P. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள்
,, K. S. இராஜா முதலியார் ,,
,, K. V. வள்ளியப்பச் செட்டியார் ,,
,, S. சிவராஜ வேலாயுதம் பிள்ளை ,,
,, M. K. ஸ்ரீநிவாச அய்யர் ,,

ஆகிய ஐவரும் தர்மகருத்தாக்களாக இருக்கிறார்கள். ஸ்தல நிர்வாக அதிகாரி திரு. M. P. சுந்தரேசம் பிள்ளை அவர்கள். கோயில்காரியங்களைக் கவனிக்க நிர்வாக அதிகாரியின் கீழ் கணக்கர்களும், மணியங்களும் இருக்கிறார்கள்.

## கட்டளை:

இக்கோயிலில் தேசாந்திரிக் கட்டளை, திருவாதிரைக் கட்டளை, தைப்பூசக் கட்டளை, சிவராத்திரி நான்கு காலத் திற்கும் க்ட்டளை இவைகள் நடைபெற்று வருகின்றன.

## தோத்திரங்களும் - இலக்கியமும்.

இத் தலத்திற்குத் திருஞான சம்பந்தப் பெருமான் அருளிச் செய்த மூன்று திருப்பதிகங்கள் உள்ளன. ஒன்று குறிஞ்சி. மற்றொன்று நட்டராகம் மூன்றாவது சாதாரி.



மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய அம்பர் புராணம் என்ற சிறந்த காப்பிய நூல் ஒன்றும் உண்டு. அதில் இத் தலவரலாறு அழகான கவிதையாகச் சொல்லப்பெற்றுள்ளது. இந்நூல் இன்னும் அச்சாக வில்லை. ஏட்டு வடிவாக இருக்கிறது.

## திருப்பணி:

அம்மன் கோயில் திருப்பணி பள்ளத்தூர் க. ப. குடும்பத்தாரால் சில வருஷங்களுக்கு முன் நடைபெற்றிருக்கிறது. கருப்பக்கிருகம் மூடித்த மகாமண்டபமும் அந்தராள மண்டபமும் மேற்பாவுகல் பரப்பப் பெற்றுள்ளன. சந்து பதியாமல் அரைகுறையாக நின்றிருக்கிறது. இப்போது நிர்வாக அதிகாரி சுந்தரேசம் பிள்ளையால் கோயில் செலவிலே திருப்பணிக்கென்று செங்கற்காளவாய் போடப் பெற்று வருகிறது. திருப்பணி நிறைவேற வேண்டிய அவசியமான நிலையில் இருக்கிறது.

## கல்வெட்டுக்கள்:

இத் தலத்தைப்பற்றிய கல்வெட்டுக்கள் 25 உள்ளன. 1910-ம் ஆண்டில் அரசாங்கத்தாரால் இவை படி எடுக்கப் பெற்றுள்ளன. இவை முதற் குலோத்துங்கனை, 2-ம குலோத்துங்கன், 3-ம் குலோத்துங்கன், விக்கிரம சோழன், ராஜேந்திர சோழன் ஆகிய இவர்கள் காலத்தன இன்னாரென்று அறியப்படாத கல்வெட்டுக்கள் ஐந்து. இவற்றால் தெரியும் உண்மைகளாவன:-

இத் தலம் முதற்குலோத்துங்கன் காலத்து உய்யக்கொண்டான் வளநாட்டு அம்பர் திருமாகாளம் எனக் குறிப்பிடப்பெறுகிறது. அவனுடைய 15-ம் யாண்டில் பூபால குலவல்லி வளநாட்டு அம்பர் நாட்டு அம்பர் திருமாகாளம் என வழங்கப் பெற்றிருக்கிறது. இறைவன் திருநாமம் அம்பர் திருமாகாளமுடையார், ஆட்கொண்ட நாயகர், திருமாகாள மாதேவர், மகாகாளநாதர், திருமாளத்து மாதேவர் என்றெல்லாம் வழங்கப்படுகிறது. விக்கிரமன் (104 of 1910) காலத்து அம்மையார் ஆலயம் குறிப்பிடப்படுகிறது. குலோத்துங்கசோழவளநாட்டு பனையூர் நாட்டு சிறுவேளூருடையான் அம்மைக்கு நிலம் அளித்ததாக அறிவிக்கிறது. 94 of 1910 கல்வெட்டு குலோத்துங்கன் 42-ம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டது. மாத்தூர் அனம்பாசள வேண்டுகோளுக்காகத் திருச்சிற்றம்பலம் சுந்தரானுல் புரவு வரிவினாகத்தைத் தேவதானமாக விட்ட செய்தியை அது அறிவிக்கிறது.

95/1910 கல்வெட்டு முதல் 103/1910 கல்வெட்டு வரை அம்பர் நாட்டு உதய மார்த்தாண்டன் வேதண்டேரைத் தேவதானமாக அளித்த செய்தியையும், சேக்கிழான வேளாண் திருவாய்க் குலமுடையான் எயினிகுடியில் முன்னிருந்த காணியாளர் கொடுக்க வேண்டிய பழம்பாக்கியான அந்தராய காசைத் தள்ளுபடி செய்து, வருகிற வேளாண்மைக்கு இடைஞ்சலில்லாது காப்பாற்றிய செய்தியையும், விக்கிரமன் நிலம்விட்ட செய்தியையும், முதற் குலோத்துங்கன் செம்மகுடியை அளித்த செய்தியையும், ராசேந்திர சோழன் உமாபரமேஸ்வரியைத் தாபனம் செய்து தேவதானம் அளித்த செய்தியையும், 2-ம் குலோத்துங்கன் காலத்தில் (கி. பி 1123—1143) க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு பனையூர் நாட்டு சிறு வேளூருடையான் உதயமார்த் தாண்ட வேளாண் ஆட்கொண்ட நாதர்க்கும் அம்மைக்கும் நிலம் விட்ட



செய்தியையும், முதற் குலோத்துங்கன் 44ம் யாண்டில் விருதராசபயங்கர வளநாட்டு அன்னியூருடையனான வீர வித்யாதர பல்லவராயன் பொன்கொடுத்த செய்தியையும் முறையே அறிவிக்கின்றன.

105 முதல் 117 வரையுள்ள கல்வெட்டுக்கள் விளக்குக்காக நிலம் விட்ட செய்தியையும் சயாமாணிக்க வளநாட்டு மேலையூர் நாட்டு குந்தவ்வை சதுர் வேதி மங்கல முடையான் ஒருவன் விளக்குக்காகப் பொன்கொடுத்த செய்தியையும், சிறு வேளூருடையான் ஒருவன் விளக்குக்காகப் பொன்கொடுத்த செய்தியையும், சிறு வேளூருடையான் நைவேத்தியத்திற்காக நிலம் விட்ட செய்தியையும், சிறு வேளூருடையான் தேவாகண்டனான பனையூர் நாட்டு மூவேந்த வேளான் விளக்கிற்கு நிலம்விட்ட செய்தியையும், அகங்க வல்லப முடையான் 50 விளக்கிற்குப் பொன் கொடுத்த செய்தியையும், குன்றக் கூற்றத்துப் பழுவூர் நாட்டு சரிபுரியனான சோழமாராயன் திருமாகாளமுடைய மாதேவற்கு முத்துமாலை வயிர முடி இவைகளைச் செய்துவைத்த செய்தியையும், பனையூர் வளநாட்டுச் சிறு வேளூருடையான் மகன் உதயமார்த் தாண்டன் விளக்கிற்காக 90 ஆடுகளை அளித்த செய்தியையும், அம்பருருடையான் வாணராயன் அகங்க மாதேவன் நிலம் அளித்த செய்தியையும், குன்றக் கூற்றத்துப் பழுவூருடையான் சோழமாராயனும் அவன் ஏவலாளர்களும் நிலம் விட்ட செய்தியையும் முறையே அறிவிக்கின்றன.

. காட்சிகொடுத்த நாயகருக்கு ஆட்கொண்ட நாயகர் எனப் பெயர் குறிப்பிடுவது அறிந்து இன்புறவேண்டியது.





(சம்பந்தர்) (ஸ்ரீ மாகாளநாதர்)

## திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த தேவாரப் பாடல்கள்

### பண் - குறிஞ்சி [1-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

அடையார் புரமூன்றும் அனல்வாய் விழவெய்து
மடையார் புனலம்பர் மாகா ளம்மேய
விடையார் கொடியெந்தை வெள்ளைப் பிறைசூடும்
சடையான் கழலேத்தச் சாரா வினைதானே.



வெருநீர் கொளவோங்கும் வேணு புரத்தன்னுள்
திருமா மறைஞான சம்பந்தன் சேணார்
பெருமான் மலியம்பர் மாகா ளம்பேணி
உருகா வுரைசெய்வார் உயர்வான் அடைவாரே.

### பண் - நட்டராகம் [2-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

புல்கு பொன்னிறம் புரிசடை நெடுமுடிப் போழிள மதிசூடிப்
பில்குதேனுடை நறுமலர்க்கொன்றையும்பிணையல்செய்தவர் மேய
மல்கு தண்டுறை யரிசிலின் வடகரை வருபுனன் மாகாளம்
அல்லு நண்பக லுந்தொழு மடியவர்க் கருவினை அடையாவே.

மாறு தன்னொடு மண்மிசை யில்லது வருபுனன் மாகாளத்
தீறும் ஆதியு மாகிய சோதியை யேறமர் பெருமானை
நாறு பூம்பொழிற் காழியுள் ஞானசம் பந்தன தமிழ்மாலை
கூறு வாரையுங் கேட்கவல் லாரையுங் குற்றங்கள் குறுகாவே.

### பண் - சாதாரி [3-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

படிபுனர் விடையினர் பாய்புலித் தோலினர் பாவநாசர்
பொடிகொள்மா மேனியர் பூதமார் படையினர் பூணநூலர்
கடிகொள்மா மலர்இடும் அடியினர் பிடிநடை மங்கையோடும்
அடிகளார் அருள்புரிந் திருப்பிடம் அம்பர்மா காளந்தானே.

செம்பொன்மா மணிகொழித் தெழுதிரைவருபுனல்அரிசில்சூழ்ந்த
அம்பர்மா காளமே கோயிலா அணங்கினோ டிருந்தகோனைக்
கம்பினார் நெடுமதிற் காழியுள் ஞானசம் பந்தன்சொன்ன
நம்பிரான் மொழிபவர்க்கில்லையாம்வினைநலம்பெறுவர்தாமே.

திருச்சிற்றம்பலம்



(இரண்டாம் கோபுரம்)

113190

PRINTED AT THE
SRI RAGHAVAN PRESS, MAYURAM.